சுற்றுநிருபம் 08/2015

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை
35, அம்மன் வீதி
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்
2015.07.02

வடக்கு மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும்
சமாசங்களின் தலைவர்களுக்கும்

## தகைமை மாற்றமும் புதிய தகைமைகளும்

கூட்டுறவு சங்கங்களுக்கான வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட சில புதிய பதவிகளும் அவற்றுக்குக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நிர்ணயித்த தகைமைகளும் தங்களது ஆவணப்படுத்தலுக்காகவும் பொருத்தமான நடவடிக்கைக்காகவும் கீழே குறிப்பிடப்பட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.

**பதவிகளும் தகைமைகளும்**

1. **கிளை முகாமையாளர் / கூட்டுறவு நகர் முகாமையாளர் / எரிபொருள் நிலைய முகாமையாளர் 208/12**

**(அ)** கூட்டுறவு ஊழியர் 13 வது சம்பளத் திட்டத்தில் களஞ்சியப் பொறுப்பாளர் / கிளை மேற்பார்வையாளர் / கிளை முகாமையாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**(ஆ)** கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரம் / க.பொ.த உயர் தராதரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் களஞ்சிய முகாமை தொடர்பாக ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரம் / க.பொ.த.சாதாரணதரப் பத்திரம் / தே.க.பொ.த பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண் கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூய கணிதம் / கணிதம் உடன் சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 4 திறமைச் சித்தியுடன் கூடிய 6 பாடங்களுடனான சித்தியுடன் கிளை நிலையம் ஒன்றின் நிர்வாகம் தொடர்பான பதவியில் ஆகக் குறைந்தது 4 ஆண்டு கால அனுபவம்.

**(இ)** **எரிபொருள் நிலைய முகாமையாளர்** பதவிக்கு மாத்திரம்
கூட்டுறவு ஊழியர் 17 வது சம்பளத் திட்டத்தில் எரிபொருள் நிரப்புனராக 10 ஆண்டு கால அனுபவம் பெற்றிருத்தல்.

2. **கிளை முகாமையாளர் / பொதியிடும் முகாமையாளர் 208/14**

**(அ)** கூட்டுறவு ஊழியர் 15 வது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 16 வது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

**(ஆ)** கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரம் / க.பொ.த. சாதாரண தரம் / தே.க.பொ.த பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண் கணிதம்/ வர்த்தக

எண் கணிதம் / தூய கணிதம் / கணிதம் உடன் சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 6 பாடங்களுடனான சித்தி.

**3. <u>வெளிக்கள உத்தியோகத்தர் (கிராமிய வங்கி ) 210/13</u>**

**(அ)** கூட்டுறவு ஊழியர் 14 வது சம்பளத்திட்டத்தில் அல்லது 15வது சம்பளத் திட்டத்தில் சம்மந்தப்பட்ட துறையிலான ஒரு பதவியில் அல்லது எழுதுனர் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

**(ஆ)** கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப்பத்திரம் / க.பொ.த சாதாரண தரம்/ தே.க.பொ.த பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண் கணிதம்/ வர்த்தக எண் கணிதம்/ தூய கணிதம்/ கணிதம் உடன் சிங்களம்/ தமிழ்மொழி என்பனவற்றை உள்ளடக்கி 6 பாடங்களுடனான சித்தி.

**4. <u>ஆய்வுகூடப் பொறுப்பாளர் 214/12</u>**

**(அ)** க.பொ.த.உயர் தர உயிரியல் விஞ்ஞான பாடத்துறையில் இரசாயனவியலில் திறமைச் சித்தி உள்ளடங்கலான மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் ஆய்வுகூடமொன்றில் பணியாற்றிய ஒரு வருட கால சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

அல்லது

**(ஆ)**க.பொ.த. உயர்தர உயிரியல் விஞ்ஞான பாடத்துறையில் இரசாயனவியல் உள்ளடங்கலான மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் ஆய்வுகூடமொன்றில் பணியாற்றிய இரு வருட கால சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(அ) மற்றும் (ஆ) தகைமைகளில் சேவைத் தகைமையைக் கொண்டிராதவர் 13 ஆவது சம்பள அளவுத்திட்டத்தின் **ஆரம்ப படிநிலையில்** பயிலுனராக (அ) எனில் ஒரு வருடமும் மற்றும் (ஆ) எனில் இரண்டு வருடங்களும் சேவையாற்றுதல் வேண்டும். இச்சேவைக்காலம் திருப்திகரமாக அமைகையில் 214/12 சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்படுவார். இச்சேவைக்காலம் பணிக்கொடைக்குரியது.

அல்லது

**(இ)** க.பொ.த. உயர்தர உயிரியல் விஞ்ஞான பாடத்துறையில் இரசாயனவியல் உள்ளடங்கலான மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலில் உயர்தரச் சான்றிதழ் கற்கைநெறியை (ACLT) பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

**5. <u>எழுதுனர் / வங்கி எழுதுனர் 302/15</u>**

**(அ)** கூட்டுறவு ஊழியர் 16 வது சம்பளத் திட்டத்தில் எழுதுனர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

**(ஆ)** கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரம் / க.பொ.த.சாதாரணதரப் பத்திரம் / தே.க.பொ.த பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண் கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூய கணிதம் / கணிதம் உடன் சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 6 பாடங்களுடனான திறமைச் சித்தியுடன் கூட்டுறவுச் சங்கமொன்றில் இலிகிதர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

**(இ)** **<u>வங்கி எழுதுனர்</u>** பதவிக்கு மாத்திரம்
மேலுள்ள (அ) தகைமை அல்லது (ஆ) தகைமையுடன் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 6 மாதங்களுக்குக் குறையாத முழுநேர MS Office உள்ளிட்ட கணனி பாடநெறி ஒன்றைப் பூர்த்தி செய்தமைக்கான தகைமைச் சான்றிதழ்.

6. **<u>கணனிப் பக்க உருவாக்குநர் 322/15</u>**
க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி மற்றும் கணிதம்/எண்கணிதம் உள்ளடங்கிய 6 பாடங்களில் சித்தியுடன் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 3மாதங்களுக்குக் குறையாத முழுநேர MS Office அல்லது அதனையொத்த கணனிப் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்தமைக்கான தகைமைச் சான்றிதழ் அத்துடன் ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஓராண்டுக்குக் குறையாத செயல் அனுபவம்.

7. **<u>பொதியிடும் உதவியாளர் 324/16</u>**

**(அ)** கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்
அல்லது
**(ஆ)** கூட்டுறவு ஊழியர் 17வது சம்பளத் திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்
அல்லது
**(இ)** 8 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் விற்பனை / பொதிசெய்யும் நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

8. **<u>உற்பத்தி உதவியாளர் 325/16</u>**

**(அ)** கூட்டுறவு ஊழியர் 17 வது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.
அல்லது
**(ஆ)** கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரம் / க.பொ.த. சாதாரண தரம் / தே.க.பொ.த பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண் கணிதம்/ வர்த்தக எண் கணிதம் / தூய கணிதம் / கணிதம் உடன் சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 6 பாடங்களுடனான சித்தி.

**பொ.வாகீசன்**
**செயலாளர்**